# මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
# நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
# MINISTRY OF FINANCE AND MASS MEDIA

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය - මුදල් / அலுவலகம் - நிதி / Office - Finance: (+94)-11-2484500, (+94)-11-2484600, (+94)-11-2484700
ෆැක්ස් - මුදල් / பெக்ஸ் - நிதி / Fax - Finance: (+94)-11-2449823
කාර්යාලය - ජනමාධ්‍ය / அலுவலகம் - வெகுசன ஊடக / Office - Mass Media: (+94)-11-2513459, (+94)-11-2513498, (+94)-11-2512324
ෆැක්ස් - ජනමාධ්‍ය / பெக்ஸ் - வெகுசன ஊடக / Fax - Mass Media: (+94)-11-2513458
වෙබ් අඩවි / வெப் சைட்கள் / Websites: www.treasury.gov.lk, www.media.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: PE/COP/POLI/Circulars
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2017.07.31

அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இல: 01/2017

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள்
மற்றும் அரச உடமைக் கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**2017 மே மாதத்தில் இடம்பெற்ற வெள்ளம், திடீர் வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட அரச தொழில் முயற்சிகளின் அலுவலர்களுக்கான விசேட கடன் முற்பணங்கள்**

வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட அரசாங்க அலுவலர்களுக்கு வட்டியல்லாத கடன் வசதிகளை வழங்குவதற்கு 2017 யூன் 28 ஆந் திகதிய 14/2017 இலக்க பொதுநிருவாக சுற்றறிக்கையில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு மேற்குறித்த வசதிகளை கவனத்திற் கொண்டு 2017 மே மாதத்தில் நாட்டில் பல பாகங்களிலும் இடம்பெற்ற அதிக மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளம், திடீர் வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட அரச தொழில் முயற்சிகளின் அலுவலர்களுக்கு வட்டியல்லாத விசேட கடன் முற்பணமொன்றினை வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. நிரந்தர அலுவலர்கள் கடன் வழங்கப்பட்ட மாதத்தினை தொடர்ந்து வருகின்ற அடுத்த மாதத்திலிருந்து ஆரம்பமாகும் முப்பத்தாறு (36) சமமான மாதாந்த தவணைக் கட்டண அடிப்படையில் அறவீடு செய்தல் என்ற நிபந்தனையின் கீழ் அடிப்படை மாதாந்த சம்பளத்தின் ஆறு மடங்குக்குச் சமமான முற்பணமொன்றினை விசேட கடனாக பெறமுடியும் என்பதுடன், தற்காலிக அல்லது அமைய அடிப்படையில் சேவையாற்றுகின்ற அலுவலர்கள் பதினெட்டு (18) சமமான மாதாந்த தவணைக் கட்டணத்தின் மூலம் அறவீடு செய்தல் என்ற நிபந்தனையின் கீழ் அடிப்படை மாதாந்தச் சம்பளத்தின் மூன்று மடங்குக்குச் சமமான முற்பணத்தினைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

03. இக்கடனானது சம்பளத்திலிருந்து மாதாந்தம் கழிப்பனவு செய்யமுடியுமான சராசரியினை வரையறுப்பதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

04. இக்கடனை பெற்றுக் கொள்ள விரும்புகின்ற அலுவலர் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் 01 இற்கமைவாக அரச தொழில் முயற்சியின் பிரிவுத் தலைவருக்கு வேண்டுகோள் ஒன்றினை சமர்ப்பிப்பதுடன் குறித்த படிவம் உரிய பிரதேசத்தின் கிராம அலுவலரினால் சிபாரிசு செய்யப்பட்டு பிரதேச செயலாளரினால் சான்றுப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

05. விண்ணப்பதாரியின் பிரிவுத் தலைவர் பிரதேச செயலாளரினால் சான்றுப் - படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் உண்மையான தன்மை தொடர்பில் தனிப்பட்ட முறையில் திருப்தியடைந்தால் மாத்திரம் பிரதான நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளர்/ பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்காக விசேட கடன் முற்பணக் கோரிக்கையினை சிபாரிசு செய்தல் வேண்டும்.

06. இந்த விசேட கடன் முற்பணமானது 2017 மே மாதத்தில் நாட்டில் ஏற்பட்ட கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளம், திடீர் வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட அலுவலர்களுக்கு மாத்திரமே வழங்கப்படுதல் வேண்டும்.

07. சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட அலுவலர்கள் இந்த விசேட கடன் முற்பணத்தினை பெற்றுக் கொள்வதற்கு பிணையாளர்களை சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை. எவ்வாறாயினும், தற்காலிய அல்லது அமைய அடிப்படையில் சேவையாற்றுகின்ற அலுவலர்கள் இக்கடன் முற்பணத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் 02 இற்கமைவாக சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட அலுவலர் ஒருவரினை பிணையாளராக முன்வைத்தல் வேண்டும்.

08. இந்த விசேட கடன் முற்பணமானது 2017.08.31 ஆந்திகதிக்குப் பின்னர் செலுத்தப்படமாட்டாது.

**ஒப்பம் : ஆர்.எச்.எஸ்.சமரதுங்க**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

1) சனாதிபதியின் செயலாளர்
2) கணக்காய்வாளர் நாயகம்
3) செயலாளர், அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு

படிவ இல. 01

**2017 மே மாதத்தில் அதிக மழையினால் ஏற்பட்ட திடீர் வெள்ளம், வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட அரச தொழில்முயற்சிகளின் அலுவலர்களுக்கு 01/2017 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றுநிருபத்திற்கமைவாக விசேட கடன் முற்பணத்திற்கான விண்ணப்பம்**

01. அலுவலரின் முழுப்பெயர்: ………………………………………………………………

02. பதவி : ………………………………………………………………………………..

03. தொழில்முயற்சியின் பெயர் : ………………………………………………………
……………………………………………………………………………………………

04. நியமனத்தின் தன்மை : நிரந்தரம் ☐ தற்காலிக ☐ அமைய ☐

05. (i) நிறுவன சேவையில் நியமன திகதி : …………………………………………...

(ii) சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி : ………………………………………...

06. சேவை நிலையத்தின் முகவரி : ……………………………………………………

07. தனிப்பட்ட முகவரி :

நிரந்தர :…………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………

தற்காலிக :………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………

08. பிரதேச செயலாளர் பிரிவு………………………………………………………

09. சேதமடைந்த ஆதனங்களின் விபரம் மற்றும் அனர்த்தங்களின் விபரம் : ……………
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..

10. பாதிக்கப்பட்ட அலுவலரது குடும்ப உறுப்பினர்களின் விபரம்:

| பெயர் | அலுவலருக்கு உறவுமுறை |
|---|---|
| | |
| | |
| | |

11. அனர்த்தத்திற்கு முன்னர் இறுதியாக சேவைக்குச் சமூகமளித்த திகதி: ….……………

12. அனர்த்தத்திற்கு பின்னர் சேவைக்குச் சமூகமளித்த திகதி: ….………………………

திகதி: ………..………  அலுவலரின் கையொப்பம் ……………………

13. **கிராமசேவை அலுவலரின் சிபாரிசு**

மேற்குறித்த திரு/திருமதி/செல்வி ……………………………………………… எனது கிராமசேவை அலுவலர் பிரிவில் நிரந்தர வதிவாளர் என்பதுடன் அனர்த்தம் தொடர்பாக அவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என்றவகையில் விசேட கடன் முற்பணக் கொடுப்பனவுக்கு சிபாரிசு செய்கின்றேன்.

பெயர் : ……………….............

திகதி : …………………………...  கையொப்பம் : ………………………..

(உத்தியோகபூர்வ பதவி முத்திரை)

14. **பிரதேச செயலாளரின் சிபாரிசு**

மேற்குறித்த சிபாரிசுக்கு நான் இணங்குகின்றேன் / இணங்கவில்லை. விசேட கடன் முற்பண கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டது / அங்கீகரிக்கப்படவில்லை.

திகதி: ………………..  கையொப்பம்: …………………………

(உத்தியோகபூர்வ பதவி முத்திரை)

15. **பிரிவுத் தலைவரின் சிபாரிசு**

அலுவலரின் அடிப்படை மாதாந்தச் சம்பளம் : ……………………………………………..

விசேட கடன் முற்பணக் கொடுப்பனவுத் தொகை : ………………………………………..

மேற்குறித்த சிபாரிசுக்கு நான் இணங்குகின்றேன் / இணங்கவில்லை. விசேட கடன் முற்பணக் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டது / அங்கீகரிக்கப்படவில்லை

திகதி: ………………  கையொப்பம்: …………………………..

(உத்தியோகபூர்வ பதவி முத்திரை)

16. **அரச தொழில்முயற்சியின் தலைவரது அங்கீகாரம்**

மேற்குறித்த திரு/திருமதி/செல்வி ……………………………………… அவர்களுக்கு …………… ரூபாவினை விசேட கடன் முற்பணக் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டது/ அங்கீகரிக்கப்படவில்லை.

பெயர்: ……………………....

பதவி: ……………………..

திகதி: ………….……….  கையொப்பம்: …………………………..

(உத்தியோகபூர்வ பதவி முத்திரை)

படிவ இல. 02

**பிணையாளரின் வெளிப்படுத்துகை**

**(இப்பகுதி அரச தொழில்முயற்சிகளின் நிரந்தர அலுவலர்களுக்கு ஏற்புடையதல்ல)**

விசேட கடன் முற்பண கொடுப்பனவினை கடன்பெறுநர் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் திருப்பிச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் கடன்பெறுநரினால் இணங்கியவாறு செலுத்தத்தவறிய கடன் தொகையினை உரிய திகதியில் கடன் மீதியினை எனது சம்பளத்திலிருந்து செலுத்துவதற்கு நான் உடன்படுகின்றேன்.

01. பிணையாளரின் பெயர் : .................................................................

02. தற்போதைய பதவி : .................................................................

03. தற்பொழுது பிணையாளர் கடமையாற்றும் நிறுவனம் : ................................

04. சேவைக்கு நியமிக்கப்பட்ட திகதி : .......................................................

05. சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி : ................................................

06. நிறுவனத்தின் கீழ் தொடர்ச்சியான சேவைக்காலம் : ...................................

07. பிணை பொறுப்பேற்கப்பட்ட தொகை : ...................................................

08. கையொப்பம் : .................................

09. திகதி : .................................

மேற்குறித்த பிணைக்காரரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதுமென நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : .....................

..............................................

நிறுவனத் தலைவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ பதவி முத்திரையும்